சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.63/2023

21.11.2025

வா.சா.1 திருமதி. பிரகதீஸ்வரி , க/பெ. செங்குட்டுவன்

1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1 ஆம் வாதி எனது கணவர் என்றால் சரிதான். தாவா சொத்து வண்டாம்பாளை கிராமத்தில் மகாசக்தி மாரியம்மன் நகரில் உள்ள மனைப்பிரிவு என்றால் சரிதான். எங்களுக்கு சொந்தமான மனை எண் 4 ல் 1,2 பிரதிவாதிகள் 2014 ஆம் வருடம் 1940 சதுரடியை ஆக்கிரமித்து பஞ்சாயத்து போர்டு கட்டியுள்ளார்கள். அதில் 600 சதுரடி கட்டுமானமும், மீதமுள்ள பகுதியில் செப்டிக்டேங்கும் கட்டியுள்ளார்கள். தாவா சொத்தை 2008 ஆம் வருடம் எனது கணவர் 1 ஆம் வாதி கிரயம் வாங்கினோம். நாங்கள் கிரயம் வாங்குவதற்கு முன்பு மகாசக்தி மாரியம்மன் நகர் உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறம் பூங்கா உள்ளது. மனை எண் 4 ஐ தவிர பூங்காவில் நான் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். எனது கணவர் கிரயம் பெற்ற சொத்தின் புல எண்ணும் பூங்காவின் புல எண்ணும் வெவ்வேறானது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரம் தெரியும். தாவா சொத்தை கிரயம் வாங்கும் போது அளந்து பார்த்துதான் வாங்கினோம். தாவா சொத்தை அளந்து பார்த்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மகாசக்தி மாரியம்மன் நகரில் உள்ள மனை எண் 3 ம் எனது கணவர் பெயரில் வாங்கியுள்ளார். மனை எண் 3, 4 க்கு எனது கணவர் தான் உரிமையாளர் என்றால் சரிதான். தற்பொழுது மனை எண் 3, 4 இரண்டையும் எனது கணவர் 2022 ஆம் வருடம் செட்டில்மெண்ட் மூலம் எனக்கு எழுதிவைத்துள்ளார். எனது கணவர் கிரயம் பெற்ற பின்னிட்டு மனை எண் 3, 4 க்கு பட்டா மாற்றினோம் என்றால் சரிதான். எனது கணவர் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் பெயரில் உள்ள ஆவணம் பட்டா தாக்கல் செய்துள்ளேன். மனை எண் 3 ல் விஸ்தீரணம் 2025 சதுரடியும், மனை எண் 4 ல் 2567 சதுரடியும் ஆக கூடுதலாக 4592 சதுரடியும் என் கணவர் கிரயம் வாங்கினாரா என்றால் ஆமாம். மனைப்பிரிவு செய்தபோது சொத்தின் உரிமையாளர் ஊராட்சிக்கு ரோடு மற்றும் பூங்கா அமைக்க உரிமை மாற்றம் செய்துக்கொடுத்துள்ளார்கள் என்றால்

சரிதான். பூங்காவிற்காக 6174 சதுரடி ஆவணம் ஊராட்சிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் கிரயம் வாங்குவதற்கு முன்பே பூங்காவிற்காக இடம் ஒதுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். பூங்காவின் பழைய புல எண் 91/13 ம், புதிய புல எண் 91/13 பி என்றால் தெரியாது. நான் சொல்வது போல் மனை எண் 4 ல் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்து கட்டிடம் கட்டப்படவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தையும் பூங்கா இடத்தையும் அளப்பதற்கு மனு செய்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் என் கணவர் கிரயம் பெறும்போது சொத்துக்களை அளவீடு செய்து கிரயம் வாங்கவில்லை என்றாலும் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்த போதும் எனக்கு எழுதிவைக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது கணவர் கிரயம் செய்துக்கொடுக்கும்போதே மனை எண் 4 ல் 2567 சதுரடி பூஸ்திதியில் இல்லை என்றால் சரியல்ல. தாவாவிலேயே 2014 ஆம் வருடம் ஊராட்சிமன்றத்தால் கட்டிடம் கட்டப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் இந்த தாவாவை தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. ஆக்கிரமித்ததாக சொல்லும் காலத்தில் நான் உரிமையாளர் இல்லை என்பதாலும் இந்த வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் 1 ஆம் வாதி தாவா சொத்திற்கு உரிமையாளர் இல்லாததால் 1 ஆம் வாதியும் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யாததால் நாங்கள் கொடுத்த அறிவிப்பிற்கு பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்தக்காலத்திலும் தனி நபருக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் எதுவும் கட்டவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.